# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2024

## பத்தாம் வகுப்பு – தமிழ்

நேரம்: 15 நிமிடங்கள் + 3 மணி நேரம் | பெரும மதிப்பெண்கள் : 100

பகுதி - 1 | 15 × 1 = 15

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் எழுதுக.**

1) அருந்துணை என்பதைப் பிரித்தால்......................

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

2) " உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் . உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம் " - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை ?

அ ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ ) முரண், இயைபு ஈ ) உவமை, எதுகை

3 ) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ......... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ..........

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

4 ) வேர்க்கடலை , மிளகாய்விதை , மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -----

அ ) குலை வகை ஆ ) மணி வகை இ ) கொழுந்து வகை ஈ ) இலை வகை

5 ) மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால்.

இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

6 ) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .........

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

7 ) "இவள் தலையில் எழுதியதோ

கற்காலம்தான் எப்போதும் ..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

8 ) அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -----

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

www.Padasalai.Net

9 ) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

10 ) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

11 ) கெடுப்பதூஉம் , எடுப்பதூஉம் - இச்சொற்களில் பயின்று வந்துள்ள அளபெடை வகை ----

அ ) இன்னிசை அளபெடை ஆ ) செய்யுளிசை அளபெடை இ ) இசைநிறை அளபெடை ஈ ) சொல்லிசை அளபெடை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு ( வினா எண்கள் 12 , 13 , 14 , 15 ) விடை தருக.

*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

12 ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?

அ ) மெய்க்கீர்த்தி ஆ ) நீதிவெண்பா இ ) சிலப்பதிகாரம் ஈ ) கம்பராமாயணம்

13 ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

அ ) இளங்கோவடிகள் ஆ ) கம்பர் இ ) கண்ணதாசன் ஈ ) கு. ப. ரா

14 ) ஆரமும் அகிலும் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ ) எண்ணும்மை ஆ ) பண்புத்தொகை இ ) வினைத்தொகை ஈ ) வினை முற்று

15 ) துகிர் – பொருள் தருக.

அ) முத்து ஆ) பவளம் இ) பட்டு ஈ) தங்கம்

பகுதி - II பிரிவு – I $4 \times 2 = 8$

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.

21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16 ) விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ ) ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே உயர்வு தரும்.

ஆ ) வசன கவிதை பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

17 ) உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

18 ) வசன கவிதை - குறிப்பு வரைக.

19) "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்"– உவமை உணர்த்தும் கருத்து யாது?

20 ) குறிப்பு வரைக - அவையம்

21 ) ' விடல் ' - என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - II 5 × 2 = 10

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.

22 ) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ ) கொள் - கோள் ஆ ) மலை – மாலை

23 ) வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.

அ ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார்.அவரை அழைத்து வாருங்கள் .

ஆ ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

24 ) கலைச்சொல் அறிவோம்: அ ) Discussion ஆ ) Homograph

25 ) **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

அ) இன்சொல், ஆ) எழுகதிர்

26 ) **ஊர்ப்பெயர்களின் மரூஉ வை எழுதுக.**

அ) புதுக்கோட்டை, ஆ) திருச்சிராப்பள்ளி

27 ) பழமொழிகளை நிறைவு செய்க.

அ ) கற்றோர்க்குச் ------------

ஆ ) உப்பிட்டவரை ------------

28 ) **அகராதியில் காண்க.** அ) அடவி, ஆ) அவல்,

பகுதி – 3 பிரிவு – I 2 × 3 = 6

29 ) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30 ) "தலையைக் கொ டுத்தேனும் தலைநகரைக் காப்போம் " - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா', 'சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்; எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்;; கவிஞர்; கட்டுரையாளர்; கேலிச்சித்திரம்- கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்; சிறுகதை ஆசிரியர்; இதழாளர்; குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் முதலிய காவியங்களையும் கண்ணன் பாட்டையும் பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி என, குழந்தைகளுக்கான நீதிநூல்களையும் பாடல்களில் தந்தவர்; இந்தியா, சுதேசமித்திரன் முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1) பாரதியார் எந்தெந்த இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார்?

2) பாரதியார் எழுதிய குழந்தைகளுக்கான நீதிநூல்கள் யாவை?

3) பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டப்பெற்றார்?

பிரிவு - 2 $2 \times 3 = 6$

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 34 கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33) எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34) ' வாளால் அறுத்து ' - எனத் தொடங்கும் குலசேகரரின் பாடலை எழுதுக. (அல்லது)

"வெய்யோன் ஒளி " எனத் தொடங்கும் கம்பரின் பாடலை எழுதுக.

பிரிவு - 3 $2 \times 3 = 6$

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

35) வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்ற இரவு. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36) கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

பகுதி - IV $5 \times 5 = 25$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

38) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

(அல்லது)

வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

www.Padasalai.Net

39 ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் , விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40 ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக .



41 ) படிவத்தை நிரப்புக.

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் வட்டம் 57, கிழக்குத்தெரு, ஆவாரம்பாளையத்தைச் சேர்ந்த பால்வண்ணனின் மகள் கலாபாரதி, பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 475 மதிப்பெண்களைப் பெற்று மேல்நிலை வகுப்பில் கணிதப் பாடப்பிரிவில் சேர உள்ளார். தேர்வர் தம்மை கலாபாரதியாக நினைத்து, உரிய படிவத்தை நிரப்புக.

42 ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

மொழி பெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

பகுதி - 5 3 × 8 = 24

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

43 ) அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44 ) அ) **அன்னமய்யா** என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் **கோபல்லபுரத்து மக்கள்** கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ) 'அழகிரிசாமியின் '**ஒருவன் இருக்கிறான்**' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45 ) அ) "**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்** " என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும்– கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி .

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | புதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

www.Padasalai.Net

மாணவர் /மாணவியின் கையெழுத்து

www.Padasalai.Net